# ‘உயிர் வாழ ஒரு மரம்; இதுவே தாரக மந்திரம்’



## 3 லட்சம் மரங்களின் ‘தாயுமானவன்’

காந்திபுரம் – வடவள்ளி செல்லும், 70ம் நம்பர் பஸ்சில் கண்டக்டராக இருக்கும் யோகநாதன், வழிநடத்துவது என்னவோ பயணிகளை மட்டுமல்ல... வருங்கால சந்ததியினரிடையே ஒளிந்து கிடக்கும் இயற்கை ஆர்வத்தையும்தான். பக்கத்து வீட்டு மரத்தின் கிளை நம் வீட்டை எட்டிப் பார்த்தாலே, சண்டை போட்டு, வெட்டி சாய்க்கும் மக்கள் வாழும் இந்தக்காலத்தில், மரத்திற்காக தன் வாழ்க்கையையே அர்ப்பணித்து வருகிறார், இந்த இயற்கை ஆர்வலர்.

சொந்த ஊர் மயிலாடுதுறை என்றாலும், இவரது குடும்பம் பிழைப்புக்காக தஞ்சம் அடைந்தது நீலகிரியில். மலையரசியின் அழகையும், தேயிலைத் தோட்டத்தின் இயற்கை சூழலையும் பார்த்து வளர்ந்ததால் என்னவோ, இவருக்கு மரத்தின் மீதான தீரான காதல் முளைத்துவிட்டது.

அப்போது இவருக்கு, 15 வயதிருக்கும். இயற்கையின் தாக்கம் அவரது கவிதைகளில் மட்டுமல்ல, மேடை பேச்சிலும், தெருநாடகங்களிலும் வெளிப்படத்துவங்கின. முன்பு, நீலகிரி மற்றும் கோத்தகிரி பகுதியில் தேயிலையை வறுப்பதற்காகவே, மரங்கள் மலையிலிருந்து அதிகளவு வெட்டப்பட்டு வந்தன. அநியாயமாக மரங்கள் வெட்டப்படுவதை எதிர்த்து அன்றே குரல் கொடுக்க துவங்கினார், யோகநாதன்.

தமிழ்நாடு பசுமை இயக்க நிர்வாகி ஜெயச்சந்திரன் அறிமுகம் கிடைக்க, மேலும் துடிப்புடன் செயல்பட துவங்கினார். யார் எங்கு மரம் வெட்டினாலும் இவருக்கு தகவல் போய்விடும். அடுத்த நாள், மரம் வெட்டப்பட்ட செய்தியுடன், ‘அரசு கவனிக்காதா?’ என அச்சிடப்பட்ட பேனர்களை ஊர் ஊராக ஒட்டி, பகிரங்கமாக தன் எதிர்ப்பை தெரிவித்திருக்கிறார்.

இப்போது, மரங்கள் மலைகளில் வெட்டப்படுவதை முற்றிலும் தவிர்க்கப்பட்டதற்கு இவர் முயற்சி முக்கிய காரணம். இதற்கான பரிசுதான், 2008ல் மத்திய அரசின் ஜனாதிபதி விருது, இயற்கை போராளி விருது, 2010ல் தமிழ்நாடு அரசின் ‘சுற்று சூழல் செயல் வீரர்’ விருது, மும்பை சி.என்.என்.,–ஐ.பி.என்., நிறுவனத்தின், ‘ரியல் ஹீரோ’ உள்ளிட்ட விருதுகள்.

இவர் நம்மிடம் பகிர்ந்தவை...

இப்போது காடு வளமும் போச்சு... நாடு வளமும் போச்சு... இயற்கை வளத்தை உணர்ந்ததால் மட்டுமே அதை பாதுகாக்க முடியும். இதை வருங்கால சந்ததியினருக்கே முதலில் கொண்டு செல்ல வேண்டும். இதற்காகவே, ‘சிலைடு புரொஜெக்டர்’ வாங்கினேன். 40 கிலோ எடையுள்ள அந்த புரொஜெக்டரை ஒவ்வொரு பள்ளியாக தூக்கிக்கொண்டு திரையிட்டு காட்டுவேன். அதில் ஒரு மரத்தின் குணங்கள், அதன் நன்மைகள், நீராதாரங்கள், வன உயிரினங்கள், பறவைகள் என இயற்கை சார்ந்த கருத்துக்கள் மட்டுமே இருக்கும்.

எனக்கு கண்டக்டர் வேலை கிடைத்து, வசதி வந்ததும், எல்.சி.டி., புரொஜெக்டர் வாங்கி அதில் திரையிட ஆரம்பித்தேன். கூடவே மரங்களையும் நட்டு வருகிறேன். இதுவரை, தமிழகம், கர்நாடகா, கேரளா மாநிலங்களில், 3,817 பள்ளி கல்லுாரிகளுக்கு, ‘விசிட்’ அடித்துள்ளேன். கடந்த 32 ஆண்டுகளில், மூன்று லட்சத்துக்கும் மேற்பட்ட மரங்களை நட்டுள்ளேன். கூடவே, இயற்கையை காப்பதற்கான விதைகளையும், மாணவர்கள் மனதில் துாவி வருகிறேன்.

மரங்களை நடுவதோடு, அவற்றை எளிமையாக பராமரிப்பதற்கான வழிமுறைகளையும், கற்றுக்கொடுக்கிறேன். இதற்காகவே போக்குவரத்து முதன்மை இயக்குனரிடம் போராடி, திங்கள்கிழமை வார விடுமுறை வாங்கியுள்ளேன். காரணம், விடுமுறை முடிந்ததும், வார முதல் நாள் உற்சாகமாக மாணவர்கள் என்னுடைய விளக்கவுரையை கவனமாக கேட்டு உள்வாங்குவர். இதுமட்டுமல்ல, ‘தாகம்’, ‘கா’ போன்ற குறும்படங்களையும் இயக்கியுள்ளேன். இதற்கு பெரும் வரவேற்பு கிடைத்தது.

மாத சம்பளத்தில் 3,500 ரூபாயை மரத்திற்காகவே செலவிடுகிறேன். இன்றைய சி.பி.எஸ்.சி., ஐந்தாம் வகுப்பு புத்தகத்தில் பாடமாக என்னைப்பற்றி வந்துள்ளதையே, என் வாழ்நாளில் மிகப்பெரும் விருதாக கருதுகிறேன். ‘உயிர் வாழ ஒரு மரம்’ – இதுவே என் தாரக மந்திரம். எங்கு மரங்கள் வெட்டினாலும் மனித மனம் துடிக்க வேண்டும். அதை என வாழ் முழுவதும் செய்வேன். பிஞ்சு நெஞ்சங்களில் மரங்கள் பற்றிய விழிப்புணர்வை பதிய வைத்துக் கொண்டே இருப்பேன்!